**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9–ம் நாள் வியாழக்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிச்செல்வி என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **சக்திவேல்** | தொழில்: | |
| த.பெ: | ராஜாமணி | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**09.04.2026 OS.24/2023 வா.சா.1. சக்திவேல்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**:

நான் கூடுதல் நிரூபண வாக்குமூலத்தின் மூலம் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்றால் சரிதான் அது 2015 முதல் தற்போது வரையிலான நடைமுறையில் உள்ள ரசீதுகள் ஆகும். நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் அனுபவத்திற்குரிய ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் தற்போது தாக்கல் செய்கிறேன். ஏற்கனவே மானாமதுரை டி.மு. கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்து எனது தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மறுதிறப்பு செய்யாமல் புதிதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் தாவா சொத்து அனுபவம் செய்யவில்லை என்றாலும் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. எனது மகனுக்கு எனது தகப்பனார் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் செட்டில்மெண்ட் பிரகாரம் நானோ எனது மகனோ தாவா சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.09 18:02:21 +0530

District Munsif Cum Judicial Magistrate,

Thiruppuvanam